செ.வெ.எண்:30 நாள்:10.10.2017

# பத்திரிகை செய்தி

**”பேகம் ஹஸரத் மாஹல் நேஷனல் ஸ்காலர்ஷிப்”**
**(மௌலானா ஆசாத் கல்வி உதவித் தொகை)**

சிறுபான்மையினர் சமூகத்ததைச் சார்ந்த கல்வியில் சிறந்து விளங்கி பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் கல்வி தொடர்ந்து பயில முடியாத மாணவிகளை அங்கீகரித்து, ஊக்குவிக்கும் வகையில் ”பேகம் ஹஸரத் மாஹல் நேஷனல் ஸ்காலர்ஷிப்” என்ற திட்டம் (முன்பு மௌலானா ஆசாத் கல்வி ஸ்காலர்ஷிப் (MAEF”) வழங்கப்பட்டு வருகிறது.

**தகுதியானவர்கள்:**

- இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினராக கருதப்படும் முஸ்லீம், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜைணர்கள் மற்றும் பார்சிஸ் ஆகிய சிறுபான்மை சமூகத்தில் உள்ள மாணவிகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்வோருக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- 9 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயில்பவர்கள் குறைந்த பட்சம் 50 சதவிகித மதிப்பெண்களும் மற்றும் 12 ஆம் வகுப்பு வரை பயில்பவர்கள் குறைந்த பட்சம் 55 சதவிகித மதிப்பெண்களும் அல்லது அதற்கு இணையான கிரேடு மதிப்பெண்கள் முந்தைய வகுப்புகளில் பெற்றிருக்க வேண்டும்.
- கல்வி உதவித் தொகை பெறுவதற்கு மாணவிகளின் பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**கல்வி உதவித் தொகை:**

9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.10,000/-மும் மற்றும் 11ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரு.12,000/-மும் இரண்டு தவணைகளில் மாணவிகளின் வங்கிக் கணக்கில் நேரடி பயன் மாற்று முறையில்(Direct Benefit Transfer) வழங்கப்படும். இந்த கல்வி உதவித் தொகையில் சேர்க்கை, கற்பிக்கும் கட்டணம், புத்தகங்கள், எழுதுபொருள் மற்றும் உண்டி உறைவிடம் ஆகிய செலவினங்கள் அடங்கும்.

**புதுப்பித்தல்:**

இத்திட்டத்தின் கீழ் மாணவிகள் ஏற்கனவே கல்வி தொடர (புதியது) பெற்றவர்கள் மட்டும் குறைந்த பட்சம் 50 சதவிகித மதிப்பெண்களுடன் அல்லது அதற்கு இணையான கிரேடு மதிப்பெண்கள் முந்தைய வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கும் பட்சத்தில் புதுப்பித்தல் கல்வி பெற தகுதியுடையவர்கள்.

**மாணவிகள்தெரிவு செய்யும் முறை:**

2011-ஆம் ஆண்டில் சிறுபான்மை பிரிவினரின் மக்கள் தொகையின் படி ஒவ்வொரு மாநிலங்களுக்கு கல்வி உதவித் தொகை ஒதுக்கீட்டிற்கு ஒதுக்கீட்டின் அடிப்படையில் செய்யப்பட்ட கல்வி உதவித் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப மாணவிகளின் பெற்றோர்/பாதுகாவலர் அனைத்து வழிகளிலும் பெறும் ஆண்டு வருமானத்தின் மதிப்பெண்கள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

மாணவிகள் www.maef.nic.in என்ற இணைய தள முகவரியில் மட்டுமே 31.10.2017-க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். பின்பு ஆன்லைனில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து அனைத்து விண்ணப்பிக்கப்பட்ட சான்றாவணங்களுடன் பள்ளி தலைமையாசிரியர்/முதல்வர் சான்றளிக்கப்பட்ட கையொப்பத்துடன் அனைத்து ஆவணங்களையும் 15.11.2017-க்குள்

Maulana Azad Education Foundation, Maulana Azad Campus, Chelmsfor Road, Opposite New Delhi Railway Reservation Centre, New Delhi 110 055. என்ற முகவரிக்கு சேரும் வகையில் தவறாமல் அனுப்பப்பட வேண்டும்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:**

- பள்ளி முதல்வர்/தலைமை ஆசிரியரால் சான்றளிக்கப்பட்ட மாணவர் புகைப்படம் இணைக்க வேண்டும்.
- பள்ளி முதல்வர்/தலைமை ஆசிரியரால் சரி பார்க்கப்பட்ட படிவத்தில் சான்றொப்பம் பெற்றிருத்தல் வேண்டும்.
- சுய சான்றொப்பத்துடன் கூடிய முந்தைய வகுப்பின் மதிப்பெண் சான்றிதழ்.
- வட்டாட்சியரிடமிருந்து பெற்ற ஆண்டு வருமானச் சான்றிதழ்.
- சிறுபான்மையினர் என்பதற்கான சுய உறுதிமொழி படிவம்.
- வங்கி கணக்கு எண், IFSC Code மற்றும் MICR Code ஆகிய விவரங்கள் அடங்கிய வங்கி கணக்கு புத்தக நகல்.
- ஆதார் அட்டை நகல்.

இக்கல்வி உதவித்தொகை திட்டத்தில் சிறுபான்மையின மாணவியர்கள் உடனடியாக விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.